தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.02.2022 முதல் 13.02.2022)

அறிக்கை எண்: 11/2022 தேதி :08.02.2022

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 33 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது.

## திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (09.02.2022 முதல் 13.02.2022)

| கடந்த வார வானிலை (04.02.2022 முதல் 07.02.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (09.02.2022 முதல் 13.02.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 04/02 | நாள்-2 05/02 | நாள்-3 06/02 | நாள்-4 07/02 | தேதி | நாள்-1 09/02 | நாள்-2 10/02 | நாள்-3 11/02 | நாள்-4 12/02 | நாள்-5 13/02 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 2 | 2 | 0 |
| 32 | 33 | 32 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 31 | 31 | 30 | 30 | 32 |
| 23 | 25 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 4 | 4 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 3 | 4 | 4 | 2 |
| 78-64 | 75-67 | 75-67 | 78-66 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-65 | 80-65 | 80-65 | 80-65 | 80-65 |
| 4 | 4 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | வட கிழக்கு |

## திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 11.02.2022 மற்றும் 12.02.2022 வரை ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது அதிகபட்ச வெப்பநிலை 30 °செ முதல் 32 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 24 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | | அறுவடை செய்த நெல் விதைகளை தற்போது நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |

| | | |
|---|---|---|
| உளுந்து | | உளுந்து பயிரில் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த விதைகளை கார்பன்டெசிம் 2 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| நெல் | | தாளடி நெற்பயிர்களில் இலை மடக்குப்புழு மற்றும் குருத்துப் பூச்சிகளின் தாக்கும் ஏற்படவாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த கார்டார்ப் ஹைட்ரோ குளோரைடு 4 சத குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ என்ற அளவில் சம அளவு மணலுடன் கலந்து இடவும். அல்லது குளோரிபைரிபாஸ் ஏக்கருக்கு 400 மிலி என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | இரவில் குளிர்ந்த காற்று வீசுவதால் கால்நடைகளை குறிப்பாக இளம் குட்டிகளை தகுந்த கொட்டகைகளில் அடைக்கவேண்டும். மேலும் வெப்பமுட்டிகள் (எ.கா. குண்டு பல்பு) பொருத்தினால் நுரையீரல் அழற்சி ஏற்படாது. |

## குறுஞ்செய்தி

அறுவடை செய்த நெல் விதைகளை தற்போது நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும்.

**இயக்குநர்**